உ

# திரு நீடூர்த் தலவரலாறு

அருட் சோமநாத சுவாமி திருக்கோயில்

நீடூர், தஞ்சை மாவட்டம்.

1971.

உ

# திருநீடூர்த் தலவரலாறு

---


எழுதித் தொகுத்தவர்

*செஞ்சொற்கொண்டல், வித்துவான்*

**சொ. சிங்காரவேலன்** எம்.ஏ., டிப். லிங்.

(தமிழ் விரிவுரையாளர், அன்பநாதபுரம் வகையார் அறத்துறைக் கல்லூரி, மாயூரம்.)



**அருட் சோமநாத சுவாமி திருக்கோயில்**

**நீடூர், தஞ்சை மாவட்டம்.**

**(1971)**

[விலை 50-காசு.

உ

# வெளியீட்டுரை

'திருநீடூர்த் தலத்தின் வரலாற்றை எழுதித்தர வேண்டும். இத்தலத்தின் பழம்பெருமையும், இலக்கியச்சிறப்பும், தெய்வீக இயல்புகளும் அனைவரும் அறிந்துரைத் தக்க எளியநடையில் எழுதித்தருக, என்று மாயூரம் அ. வ. அ. கல்லூரித் தமிழ் விரிவுரையாளர் செஞ்சொற் கொண்டல் வித்துவான் திரு சொ. சிங்காரவேலன், M. A., Dip. Ling அவர்களைக்கேட்டுக்கொண்டோம். "திருஞான சம்பந்தர் தேவாரத் திறனாய்வு" என்ற அரிய ஆராய்ச்சி நூலைத் தமிழகத்திற்குத் தந்துள்ளதோடு அப்பர் தேவார ஆராய்ச்சியும் செய்துவருபவர்கள் அவர்கள். தருமையாதீனத் தமிழ்க் கல்லூரி முதல்வராகப் பல ஆண்டுகள் இருந்து ஆதீன நூல் வெளியீட்டுப் பணியில் நிரம்பிய அனுபவம் உடைய வர்கள். அவர்கள் எங்கள் வேண்டுகோளுக்கிணங்கி இந்நூலை மிக்க சுருங்கிய காலத்தில் ஆராய்ச்சிக் குறிப்புக்களைத் திரட்டி எழுதி உதவினார்கள். அவர்கட்குத் திருக்கோயில் சார்பில் எங்கள் நன்றி.

இதனை வெளியிட்டுச் சிறப்புரை வழங்கிட எங்கள் நாகை உதவி ஆணையர் திரு P. புலியூர் உடையான் அவர்களை அணுகினோம். அவர்களும் இசைந்து வெளியிட்டுள்ளார்கள். அவர்கட்கு எம் நன்றியும் பணிவும்.

அருட்சோமநாதர் திருவருள் துணைநின்றால் எல்லாம் சிறக்க நிகழும் என்பது எம் ஆழ்ந்த நம்பிக்கை. அப்பெருமான் திருவடி வாழ்த்தி இத் தல வரலாற்று நூலை வெளியிடுகின்றோம்.

அருட்சோமநாத சுவாமி
திருக்கோயில், நீடூர்
2....1... 71

**V. நாராயணன்,** B.A.,
நிர்வாக அதிகாரி

உ

குருபாதம்



# தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ கயிலை சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள்

---

தருமபுரம், மாயூரம் P. O.
4—1—'71

" ஞாலம் நின்புகழே மிகவேண்டும் தென்
ஆலவாயில் உறையும் எம் ஆதியே "

மூர்த்தி தலம் தீர்த்தம் முறையால் தொடங்கினர்க்கோர் வார்த்தை சொலச் சற்குருவும் வாய்க்கும் பராபரமே என்பது தாயுமான அடிகளின் தண்டமிழ் வாக்கு. தீர்த்த யாத்திரை, தல யாத்திரை சென்று மூர்த்திகளைத் தரிசிப்பதால் மனிதன் பண்பாடு அடைகிறான். சுயநலம் குறைந்து பிறர் நலம் பேணத் தலைப்படுகிறான். இவ்வாறு மனப் பண்பு உறுங்காலந்தான் ஆசாரியன் உபதேசிக்கும் காலம். இந்நிலையில் உபதேசிப்பதைத்தான் மாணவன் மாண்புற ஏற்றுக்கொள்கிறான், கரம்பு நிலத்தைத் திருத்தி உழுது எருவிட்டுத்தான் வித்தை

விதைக்க வேண்டும். அதுபோல் மனித மனத்தையும் தீர்த்த யாத்திரை தல யாத்திரையால் பண்படுத்திய பிறகு ஆசாரியார் உபதேசித்தால்தான் உபதேசப் பயிர் ஓங்கி வளரும். உயர்ந்து பயனைத்தரும். இவ்வகையில் யாத்திரை மேற்கொள்வோருக்கும், அன்றாடம் வழிபடும் உள்ளூர் அன்பர்கட்கும் மூர்த்தியின் கீர்த்தியும், தலத்தின் மாட்சியும், தீர்த்தச் சிறப்பும் தெரிந்து வழிபடுவது சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்வது போலாம். இதற்கேற்ற முறையில் நீடூர், திருசோமநாதசுவாமி திருக்கோயில் வரலாற்றினை சொ. சிங்காரவேலன் எளிய இனிய நடையில் எழுதியுள்ளதைக் கண்டு மகிழ்ச்சி அடைகிறோம். ஆலய ஆட்சியாளர்கள் இந்நூலை வெளியிடும் முயற்சி பாராட்டிற்கு உரியது. செந்தமிழ்ச் சொக்கர் திருவருளால் அனைவருக்கும் நல்லன எல்லாம் பெருக வாழ்த்துகிறோம்.

---

# நூன்முகம்

சோழநாட்டின் பாடல்பெற்ற தலங்களுள் திருநீடூர் மூவருள் இருவராற் பாடப்பெற்ற தலம். சங்ககாலத்தே வேள் எவ்வி என்ற பெருவீரமும், வள்ளன்மையும் படைத்த வேளாளக் குறுநில மன்னர் நாட்டின் தலைநகர்; சோழர் காலத்துக் கல் வெட்டுக்கள் கொண்ட நல்லிசைப்பதி; தலபுராணச் சிறப்பு உடையது; சோமன், சூரியன், நண்டு முதலி யோர் வழிபட்ட வான்புகழ் உடையது. இந்நீடூர்த் தலவரலாற்றை எளிய உரைநடையில் எழுதிட வேண்டும் என்ற எண்ணம், இத்திருக்கோயில் நிருவாக அதிகாரி திரு. வி. நாராயணன் பி. ஏ. அவர்கள் உள்ளத்துத் தோன்றிற்று; அந்த எண்ணத் திற்குத் துண்டுகோலாய் நின்றவர்கள் பல்லவராயப் பேட்டைப் பெருநிலக்கிழார் திரு. ஜி. சுந்தரேசம் பிள்ளை அவர்களும், திருக்கோயில் அறங்காவலர் திரு. டி. எஸ். வேலாயுதம் பிள்ளை அவர்களும் ஆவர்.

இந்த அன்புள்ளங்களின் ஆர்வத்தால் திருநீடூர்த் திருக்கோயிலுக்கு வந்து வழிபட்டுத் திருமுன்னர்த் திருப்பதிகம் ஓதி, நூல் எழுதும் உள்ளுணர்விற்குக் கால்கோள் செய்யும் வாய்ப்பு எளியேனுக்கு 25-12-70 வெள்ளிக்கிழமையன்று நண்பகலில் வாய்த்தது; விளைவு, இன்று மலர்ந்திருக்கும் இச்சிறு தமிழ் உரைநடைநூல்.

இவ்வுரைநடை மலருள் நீடூர்த் தலத்தின் பழமை, தண்மை, நன்மை, செம்மை முதலிய அனைத்தும் மணக்கும், தமிழ்நாடு அறநிலைய ஆட்சித்துறை நாகை ஆணையர் திரு. P. புலியூர்உடையான் அவர்கள் இதனை வெளியிட்டு வழங்குகின்றார்கள். விழாவிற்கு எங்கள் கல்லூரி ஆட்சிக்குழுச் செயலாளரும் செயற்றிறமும், இன்சொல்லும், மதிநுட்பமும் உடைய பண்பின் செம்மல் திரு. S பாலசுப்பிரமணிய பிள்ளை B. SC. அவர்கள் தலைமை சிறப்பிற்சிறப்பு. இப்பணிக்குத் துணைநின்ற அனைவர்க்கும் என் அன்பும், நன்றியும் என்றும் உரியன.

இவ்வாறு அவ்வப்போது என்னைத் தூண்டித் தமிழ்ப்பணி கொள்ளும் எல்லாம்வல்ல பரம்பொருளின் திருவடிகளை மனமொழி மெய்களால் வந்தித்து வாழ்த்துகின்றேன்.

அன்பன்,

**செ. சிங்காரவேலன்,**
தமிழ் விரிவுரையாளர், அ. வ. அ. கல்லூரி,
மாயூரம்.

செந்தமிழ் நூலகம்,
தருமபுரம்,
1 - 1 - 71.

உ

# அணிந்துரை.

பல்லவராயப்பேட்டைக்கு ஒரு பெரிய சிறப்பு என்னவென்றால் ஒருபக்கம் நீடூர் அருட்சோமநாதர்; மறுபுறம் திருவிழந்தூர் தான்தோன்றீசுவரர். இருபுறமும் திருவருட்காவல். சைவ வேளாளர் பெருங்குடிமக்கள் இடையில் வாழ்ந்து எப்போதும் இரண்டுதரிசனமும் செய்துகொண்டு வாழும் சிறப்பு திருநீடூர்த் திருக்கோயிலுக்கும் பல்லவராயப் பேட்டைச் சைவவேளாண் குடிக்கும் திருப்பணிகள் முதலிய பல தொடர்பு உண்டு. இங்குள்ள ஆலால சுந்தரி அம்பிகையை ஆண்டுதோறும் பெருவிழா எடுத்து வழிபடுவதும் நலம் பெறுவதும் அனைவரும் அறிந்ததே. இத்தல வரலாற்றை நம் அ. வ. அ. கல்லூரித் தமிழ் விரிவுரையாளர் என் அன்பிற் கினிய இளஞ்செல்வர் திரு. சொ. சிங்காரவேலன் M. A., Dip. Ling. அவர்கள் தக்க ஆராய்ச்சிக் குறிப்புக் களுடன் தலபுராண அடிப்படையில் சுவையாக எழுதியுள்ளார். நான் உடனின்று 25—12—70-ல் பெருமானை வழிபட்டபோது, இவ்வூர்ப் பதிகத்தை அருட்சோமநாதர் திருமுன் அகமுருகிப்பாடி வழி பட்ட நினைவு என் நெஞ்சில் பசுமையாக இருக்கும்.

இந்நூலாசிரியர் அவர்கள் பல ஆராய்ச்சி நூல்களைத் தமிழுலகிற்குத் தந்தவர். மேலும் பல தொண்டாற்றிக்கொண்டு வருபவர். திருச்சிற்றம் பலத்தைச் சேர்ந்தமையால் இவர்க்கும் எனக்கும் ஆத்மார்த்தமான தொடர்பும் உண்டு. இந்நூலை அனைவரும் படித்துப்பார்த்து இந்தத்தல மான்மியத்தை அறிந்து உய்யுமாறு வேண்டுகிறேன்.

பல்லவராயப்பேட்டை,
4-1-71.

**G. சுந்தரேசம் பிள்ளை,**
பெருநிலக்கிழார்.

# முகவுரை

சோழநாட்டில் காவிரி வடகரையில் பாடல்பெற்ற சிவஸ்தலங்களில் திருநீடூர் என்பது ஒன்று. இது அப்பர், சுந்தரர், ஆகிய இருவருடைய தேவார பதிகங்கள் உடையது. நீடூரின் வரலாறு மிகவும் சிறப்பானது. இங்கு தலவிருஷம் மகிழ். வகுளம் என்று வடமொழியில் சொல்லப்படும். வகுளமாலை அணிந்த சிறப்பினால் நம்மாழ்வார் வகுளாபரணர் என்று பெயர்பெற்றார் என்பது வைணவ வரலாறு. நீடூருக்கு வடமலையப்ப பிள்ளையின் நானூறு பாடல் கொண்ட தலபுராணம் பாடியிருக்கிறார். இவர் இந்த ஊரில் கார்காத்த வேளாளர் மரபில் பிறந்தவர். இவரும் இவருடைய பாட்டனாரும் வடமலையப்பன் என்ற பெயருடையவர்கள். பெரியவர் வாழ்ந்தகாலம் திருமலைநாயக்கர் காலம். (பதினேழாம் நூற்றாண்டின் நடுப்பகுதி) இவருடைய வரலாறு நீடூருக்கே பெருமை தருவதாகும்.

இவர் காலத்தில் இங்கு இவர் உறவினர் குடும்பங்கள் அடங்கிய அறுபது வீடு கொண்ட ஒரு பெரிய வேளாளர் வீதி இருந்தது. குமரகுருபரர் சுவாமிகளுக்கு ஆதரவு கொடுத்து திருமலைநாயக்க மன்னன் திருநெல்வெலிச் சீமையின் ஆட்சியை செய்வதற்கு ஒரு சிறந்த அதிபதி வேண்டுமென்று தேடினார். வடமலையப்பருடைய தகுதி அறிந்து இவரை அப்பதவியை ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டினார். சிவபக்தி மிகுதியும் வள்ளல் தன்மையும் ஆட்சிதிறனும் ஒருங்கே படைத்த வடமலையப்பர் நாயக்கருடைய வேண்டுகோளை இறைவன் பணியாகவே ஏற்று திருநெல்வேலி சென்று இராசவல்லிபுரத்

தில் தம் உறவினர் அறுபது குடும்பத்தாரையும் குடியேற்றி நிர்வாகத்தை நடத்திவந்தார்.

இவர் காலத்திற்கு சற்றுமுன் திருச்செந்தூர் கடற்கரையில் டச்சுக்காரரும், போர்ச்சிக்கீசியரும் அடிக்கடி சண்டையிட்டுக்கொண்டும், கொள்ளை யடித்து வந்தனர். ஒருசமயம் அவர்கள் திருச்செந் தூர் முருகப்பெருமானை கடலில் தூக்கிஎறிந்து விட்டு போய்விட்டார்கள். பல ஆண்டுகள் கழித்து வடமலையப்பர் நிர்வாகம் நடந்தபோது ஒருநாள் இரவில் முருகப்பெருமாள் கடல்நீருக்கு அடியில் தாம் இருந்த இடத்தை சுட்டிக்காட்டி தம்மைக் கொண்டுவந்து பிரதிஷ்டை செய்யுமாறு கட்டளை யிட்டார். அவரும் அந்த இடத்தில் முத்துக்குளிப் பவரை தேடச்செய்து பெருமானுடைய திருவுருவத் தை கண்டெடுத்து கொண்டுவந்து பிரதிஷ்டை செய்து விரிவாக உத்ஸவம் நடத்தினர். இச்செய்தி அதேகாலத்தில் திருச்செந்தூர் தலபுராணம் பாடிய வென்றிமாலை கவிராசர் என்ற புலவர் பெருமான் ஒரு கீர்த்தனத்தில் பாடிவைத்திருக்கிறார்கள்

இவ்வாறு பக்தியினல் பிரசித்திபெற்ற இவருடைய பேரரான வடமலையப்பர் தன் குலத் தோர் வாழ்ந்த நீடூருக்கு மிகவும் அழகான புராணம் பாடினர். இது சிறு நூலாய் இருந்தபோதிலும், மடக்கு, யமகம் முதலிய சொல் அணிகளும் பொருள் அணிகளும் நிரம்பியுள்ளது. இவர் இரண்டாயிரத் திற்கு மேற்பட்ட மச்ச புராணமானது இவருடைய வடமொழி அறிவையும் புலப்படுத்தும். மக்களுக் குள் தலைமைபூண்டிருந்த தகுதி காரணமாக இவர் களுக்கு ஐயன் என்றும் பெயர் வழங்கிவருகிறது.

இவ்வாறு இந்தபுண்ணியத்தலம் அப்பர் காலம் தொடங்கி இன்றுவரையில் தெய்வச்சிறப்பும்,

இலக்கியச்சிறப்பும் பெற்றிருக்கிறது. காலகதியின் கோளாரில் இங்கு இப்போது ஆலயத்தைச் சுற்றி வழிபடுவோர் இருக்கை குறைந்துவிட்டது. ஆனல் சுமார் 45 ஆண்டுகளுக்கு முன்........................ஊர்

நகரத்தார் மரபினுலான ........................................ செட்டியார் அவர்கள் அருமையாக கருங்கல் திருப்பணி செய்திருக்கிருர்கள். தமிழ் நாட்டில் நகரத்தார் பெருமக்களால் அழகாக திருப்பணி செய்யப்பெற்ற கோயில்களுள் இதுவும் ஒன்று.

இத்தலத்தின் வரலாற்றை எல்லாச் சிறப்பும் பொருந்த சொ. சிங்காரவேலனுர் நயம்பட எழுதி யுள்ளார். மிகவும் முயன்று திருப்பணிக்கு முன் இருந்த கல்வெட்டுக்களில் கண்ட கண்டன் மாதவன் என்பவன் ஒரு யாப்பிலக்கணம் பாடுவதற்கு தூண்டுதல் அளித்த செய்தியையும் குறிப்பிட்டிருக்கிருர் 63நாயன்மார்களில் ஒருவரான முனையடுவார் நாயனுர் இங்கு வாழ்ந்தார். இவர் வரலாற்றையும் தலவரலாறுகள் பலவற்றையும் இச்சிறு புத்தகம் நன்கு விளக்கி வழிபடுவோரை மூர்த்தி, தலம், தீர்த்தம் என்ற மூன்று விசேடங்களினிடத்தும் ஈடுபடுத்தும் முறையில் அமைந்துள்ளது. சைவ அன்பர்கள் இத்தலவரலாற்றினை நன்கு பயின்று அது காட்டும் வழியில் வேயுறு தோளி பங்கனுன சோமநாதபெருமானுடைய திருவருளுக்கு பாத்திரர் ஆவார்களாக.

சிங்காரவேலனுர் செந்தமிழ்பணி சிறக்க இறைபணியாளர் நாராயணன் அவர்களுடைய நன்முயற்சிகள் வெல்வனுக.

திருவருள் முன்னிற்க.

**மு. அருணாசலம்,**
திச்ருசிற்றம்பலம்.

உ

# திரு நீடூர்த் தலவரலாறு

**நிலைபெற்றவாழ்வு:**

உலகில் வாழ்வது என்பது உண்ணுதற்குரிய உணவுகளை உண்டு, உடுத்தற்குரிய உடைகளை உடுத்தி, வீணே பொழுது போக்குவது அன்று. உண்ணுதல் விலங்குகட்கும் உரிய ஒன்று ஆகும். மனிதராகப் பிறந்தவர்கள் விலங்குகளினின்றும் வேறுபட்டுச் சிறந்து உயர்தல் வேண்டும். விலங்குப் பிறப்பினின்றும் மனிதனை வேறுபடுத்திக் காட்டுவது அவன்பெற்றுள்ள மனஉணர்வே ஆகும். பெற்ற மனத்தாற் சிந்தித்தலும், அச்சிந்தனை வளத்தால் செந்நெறி செல்லுதலும் மனிதன் செய்யத்தக்க செயலும், செல்லத்தக்க நெறியும் ஆகும். ஆனால் பெரும்பாலோர் நிலை என்ன? வயிறு புடைக்க உண்ணுதலும், வாய் வலிக்க வீணுரை பேசுதலும், இறுதிநாள் வந்தவிடத்து வீணே மடிதலும் ஆகப் பலர் வாழ்நாள் அழிந்தொழிகின்றது. ஆனால், சிலர் உலகில் நிலைபெற்று விடுகின்றனர்கள். தம்முடைய உயர்ந்த சிந்தனையால், உயர்ந்த உரைகளால், உயர்ந்த செயல்களால் உலகில் அழியாத நிலைபெற்று என்றும் வாழ்கின்றனர்கள். முன்னவர்களைப் பாரதியார் 'வேடிக்கை மனிதர்' என்று உரைத்து அவரைப் போல் தாம் வீழ்பவர் அல்லர் என்று கூறியிருப்பது இங்கு நினைவிற்கு வருகின்றது.

## குறிக்கோள் மாட்சி:

இத்தகு நிலைபேறு சிலர்க்கு வாய்க்கும் நிலை எப்படி உண்டாகிறது? அவர்கள் தம் குறிக்கோளை - இலட்சியத்தை உணர்ந்து வாழ்கின்றார்கள். அந்த இலட்சிய உணர்வு அவர்கட்கு என்றும் இதயத்தில் நிலையாக உள்ளது. உலகியல் நிலை வேறுபாடுகள் அந்த உணர்வை அசைத்திட இயலாதவாறு அவர்கள் நிலைபெற உறுதிப்பட்ட நிலையில் ஊன்றி நிற்கின்றார்கள். 'மலையே வந்து விழினும் மனிதர்காள், நிலையினின்று கலங்கப்பெறாது வாழ்வீர்களாக' என்ற அப்பரடிகள் அருள்உரை இந்நெறி உணர்த்துகின்றது. ஊழிக்காலமே பெயர்ந்தாலும் தாம் பெயராத உறுதிப்பாடு இத்தகைய சான்றோர்க்கே உண்டு என்கின்றார் தெய்வப்புலவர் திருவள்ளுவர்.

" ஊழி பெயரினும் தாம்பெயரார் சான்றாண்மைக்கு
ஆழி எனப் படுவார்."

பால் புளித்துப் பகல் இருண்டு, நால்வேத நெறி திரிந்தாலும் இவர்கள் தம் உயர்நிலையினின்றும் பிறழமாட்டார்கள்; இவர்கள் கூறுமொழிகளும் உண்மையாய் நிலைக்கும்; **'என்றும் பிறழா பெரியோர் வாய்ச்சொல்'** என்று பாராட்டும் பைந்தமிழ் உலகு. இவர்களது வாழ்வும் வாய்மொழியும் மன்பதை வாழ வழி காட்டுபவை.

## பெருநெறி:

சான்றோர்களது வாழ்வை முன்வைத்து வாழ்க்கையை நடத்திக்கொண்டு போனால், உலகில் இன்ப வாழ்வு வாழலாம்; துன்பங்களைக் கண்டு துவளாது முன்னேறலாம்; எதிர்ப்படும் துன்பங்களையும்

மலர்ந்த முகத்தோடு எதிர்கொள்ளலாம்; 'பொல்லா உலகம், பொல்லா உலகம்' என்று சலித்து மனம் அழியாமல், நில்லா உலகத்தில் மெய்ப்பொருள் கண்டு வாழ்ந்து மனநிறைவு பெறலாம். அறம் என்ற பெருநெறி பிடித்தொழுகி மெய்ப்பொருளாகிய செம்பொருளைக் கண்டு உருகும் சிறப்பும் பெறலாம்.

**மனநிறைவும் மலர்ச்சியும் :**

தெய்வமணம் கமழும் நம் தமிழ்த் திருநாட்டில் எண்ணற்ற திருத்தலங்கள் உள்ளன. அங்கெல்லாம் பெரிய உள்ளம் கொண்ட சான்றோர் உயர்ந்த பரம் பொருளை வழிபட்டு நெறிகாட்டியிருக்கின்றார்கள். அந்த நெறியே திருநெறி, பெருநெறி, ஒருநெறி, அருநெறி, உயர்நெறி என்றெல்லாம் போற்றப்படு கின்றது. குறிக்கோளினின்றும் வழுவாமல் முன்னேற இத்தலங்களிற் சென்று வழிபடுதலும், ஆங்காங்குப் பாடல்பெற்ற அருள்மொழிகளில் ஆழ்தலும் நம் கடமைகளாகக் கொள்ளுதல் வேண்டும். உலகக்கடமைகளில் ஒன்றாகவே இவற்றை மேற்கொள்ளுதல் வேண்டும் கொண்டால் மனநிறைவும் மலர்ச்சியும் பக்தியும் தோன்றும். ஞானநெறியில் நாட்டம் மலரும். பரந்த உள்ளம் விளையும். எல்லோரும் இன்புற்றிருக்கும் நிலை வர வேண்டும் என்று கருதும் பண்பாடு அரும்பும். உலகம் ஒன்று; மனிதர் யாவரும் ஒரே குடும்பத்தவர் என்று எண்ணும் எண்ணம் உறுதிப்படும்.

'எவ்வுயிரும் நீங்காது உறையும் இறைவன்' என்ற நினைவும், அதனால் எவ்வுயிர்க்கும் அன்பால் இருக்கும் நிலையும் விளையும். இதுவே உயர்ந்த

சமயநெறியும் அநுபவமும். இந்நிலையும் நினைவும், வாராத வரை நம் பூசையும், பாராயணமும் பிற செயல்களும் பயனற்றவையே. தமிழகத்துப் பாடல் பெற்ற பதிகள் இந்த உணர்வை நமக்கு உண்டாக்கு கின்றன. இங்குப் புராண வரலாறுகள் அளிக்கும் உணர்வும் இதுவே. நாரையும், எறும்பும், கருங் குருவியும், குரங்கும், அணிலும், குயிலும், ஆனையும், கழுதையும், நண்டும், கிளியும், மயிலும் முதலிய அஃறிணை உயிர்களும் பல பழம்பதிகளில் பரம்பொருளை வழிபட்டு வீட்டின்பம் பெற்ற தலங்கள் பலவற்றை நம் திருநாட்டிற் காண்கின் றோம். ஓரறிவுயிர் முதலாக ஐயறிவுயிர்கள் வரை, அவைகூட அறிவறிந்த வழிபாட்டால் குறிக்கோளை அடையும்போது, மனஉணர்விற் சிறந்த மனிதன் ஏன் அடையலாகாது என்ற சிந்தனையை எழுப்பி, அந்த நெறியில் அயராது சென்றிட அத்தல வழிபாடுகளும் சிந்தனையும், வரலாற்றுணர்வும், உண்டாக்கும். இத்தகு நல்லிடைப்பதிகளுள் ஒன்றே திருநீடூர்.

## நீடூர் - இருப்பிடம் :

சோழவள நாட்டில் காவிரிக்கு வடகரையிலும் தென்கரையிலும் இருக்கும் எண்ணற்ற சிவதலங் களுள், வடகரைத் தலமாக விளங்குவது நீடூர். திருமயிலாடுதுறைத்தலத்திற்கு வடமேற்கே மூன்று கல் தொலைவில் உள்ளது இத்தலம், மாயூரம் சிதம்பரம் புகைவண்டித் தொடர் நிலையங்களில் இவ்வூர்க்கும் நிலயம் உண்டு. மாயூரத்திலிருந்து செல்லுங்கால் திரு இந்தளூரைத் தாண்டிச் செல்லு

தல் வேண்டும். திருஇந்தளூர் இக்காலத்துத் திருவழுந்தூர் என்றும் வழங்கப் பெறுகின்றது. இத்தலம் பழமையும் பெருமையும் உடைய நல்லூர் ஆகவிளங்குகின்றது.

**சங்க காலப் பழமை.**

பழமைச் சிறப்புடைய பழந்தமிழ் நூல்களி லேயே நீடூர் குறிக்கப் பெற்றுள்ளது என்பது அறிந்து மகிழத்தக்க சிறப்புடையதாகும். அகநா னூறு, புறநானூறு ( அகம், 266, புறம்-26 ) ஆகிய இருபெருஞ் சங்க நூல்களில் இவ்வூரைச் சார்ந்த வேள் எவ்வி பற்றி வரும் குறிப்புக்கள், **'வேள் எவ்வி'** என்ற பெருவீரனுக்குரியதாக இவ்வூரைச் சுட்டு வதுடன், சிறந்த இசை வல்லார் இந்த ஊரில் இருந் திருக்க வேண்டும் என்றும் கருதுமாறு அமைந் திருக்கின்றன. இன்று முகமதியர் பலரும் வாழும் பகுதியாக, சிற்றூராக விளங்கும் இவ்வூரின்கண் சங்ககாலத்தே ஒரு பெருவீரன் ஆட்சி செய்தான் என்பதும், அவனுடைய வாளாற்றல் தமிழகமெங் கணும் சிறந்து விளங்கிற்று என்பதும் சிந்திக்க இன்பமூட்டும் செய்திகள்,

" யாழிசை மறுகின் நீடூர் கிழவோன்
வாய்வாள் எவ்வி ஏவல் மேவார்
நெடுமிடல் சாய்த்த பசும்பூண் பொருந்தலர்
அரிமணவாயில் உறத்தூர் ஆங்கண்
கள்ளுடைப் பெருஞ்சோற்று எல்லிமிழ் அன்ன
கவ்வை ஆகின்றால் பெரிதே " ( அகம், 266)

என்பது பரணர் பாட்டு. யாழினின்றும் எழும் இடையானது நீடூரின் தெருவெல்லாம் நிறைந்திருந்தது என்பது, '**யாழிசை மறுகின் நீடூர்**' என்ற தொடராலும். அதற்கு உரியவன் எவ்வி என்பது '**கிழவோன்**' என்ற சொல்லாலும், அவன் தப்பாத வாள் வெற்றியை உடையவன் என்பது '**வாய்வாள்**' என்ற அடைமொழியாலும் விளங்குகின்றன. பெரிய புராணக் காலத்திற்கும், அதனுள் வரும் நாயன்மார் வரலாற்று மூலமான திருத்தொண்டத் தொகைக் காலத்திற்கும் முந்திய காலத்தில் '**முனை அடுவார்**' என்ற பெருவீரமிக்க நாயனார் இந்த ஊரிற் பிறந்தவர் என்பதும் இங்கே நினைக்கத்தக்க ஒன்றாகும். '**வேள்**' என்ற சொல் 'வேளாளர்' கட்குரிய பெயராதலின், எவ்வி வேளாளக்குடியைச் சார்ந்தவனாயிருத்தல் வேண்டும் என்பதைத் தெளிவு படுத்தும்.

## மிழலைநாட்டு எவ்வி :

[தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியனை மாங்குடி மருதனார் பாடும் புறப் பாட்டில் (24)

"ஓம்பா ஈகை மாவேள் எவ்வி
புனலம் புதவின் மிழலையொடு கழனிக்
கயலார் நாரை போர்விற் சேக்கும்
பொன்னணி யானைத் தொன்முதிர் வேளிர்
குப்பை நெல்லின் முத்தூறு"

எனவரும் வரிகள், வேள் எவ்வி என்பான் மிழலைக் குரியவனாகச் சுட்டப் படுதலாலும், 'மிழலை நாடு' என்பது கல்வெட்டுக்களாற் கூறப்படுதலாலும்

'மிழலை நாடு' பற்றி அறியலாம். மிழலை நாட்டிற் குரியவனுகிய வேள் எவ்வி நீடூரைத் தலைநகராகக் கொண்டிருந்திருக்கக் கூடும் என்று கருதலாம். 'ஓம்பா ஈகை' என்ற தொடர் எவ்வியின் வல்லன்மையைக் குறிப்பதாகும்,

அதற்கேற்ப முனையடுவார் நாயனுரும் இவ் வூரின் வேளாளர் குலத்துப் பெருவீரர் வள்ளலார் என்றே சேக்கிழார் கூறுவதும் இங்கே ஒப்பிடத் தக்கது ஆகும். 'மாருது அளிக்கும்' என்ற தொடர் மரபுவழிப்பட்ட வண்மையைக் குறிப்பதாகலாம்.

''விளங்கும் வளமைத் திருநீடூர்
வேளாண் தலைமைக் குடி முதல்வர்
களங்கொள் மிடற்றுக் கண்ணுதலார்
கழலிற் செறிந்த காதன்மிகும்
உளங்கொள் திருத்தொண்டுரிமையினின்
உள்ளார் நள்ளார் முனையெறிந்த
வளங்கொடிறைவர் அடியார்க்கு
மாருதளிக்கும் வாய்மையார்''

(முனையடுவார் புராணம் 2)

சங்ககாலத்தே பெருவீரம் உடையதாக விளங்கிய வேளாளர் குடி – எவ்வியின் தொக்குடியாக இருந் திருத்தல் கூடும். முனையடுவார் அந்த வீரக்குடியில், வேளாளர் திருமரபில் தோன்றியவராகக் கொள்ளு தல் தவருகாது. இவ்வாறு பழம்பெருமை வாய்ந்த தாக இந்த நல்லிடைப்பதி விளங்கி வருகின்றது.

## நாயன்மார் கால நிலை

சங்ககாலத்தை அடுத்துத் தேவாரம் பாடப் பெற்ற காலத்தும் (கி.பி. 7ம் நூற்றுண்டு), பெரிய புராணக்காலத்தும் (கி.பி.12ம் நூற்றுண்டு) நீடூர் நீர்வளம், நிலவளம் நிறைந்து விளங்கிற்று என்பது அங்குக் காணப்பெறும் குறிப்புக்களான் உணரப் பெறும். "நிறை புனற் கழனிச் செல்வ நீடூர்" (சுற், பா. 1) "புன்னை மாதவி போதலர் நீடூர்,, (பா. 2) "ஆடு நீர் வயல் சூழ்புனல் நீடூர்" (பா. 3) "ஆடுமாமயில் அன்னமோடு ஆட அலைபுனற் கழனி நீடூர்" (பா. 4) "சுற்றுநீர் வயல் சூழ் திரு நீடூர்" (பா. 5) "கட்டியின் கரும்பு ஓங்கிய நீடூர்" (பர். 6) "கெண்டைவாளை கிளர்புனல் நீடூர்" (பா 9) "எல்லி மல்லிகையே கமழ் நீடூர்" (பா. 10) என்றெல்லாம் சுந்தரர் தேவாரத்துச் சொல்லப் பெறுகின்றது, "நெல்லால் விளைகழனி நீடூர்ரானை" (அப்பர். பா. 3) "நிலையார் மணிமாட நீடூரானை" (பா. 4) "நீணுலா மலர்கழனி நீடூரானை" (பா. 6) "நிரையார் மணிமாட நீடூரானை" (பா. 7) "நீடரவத் தண்கழனி நீடூரானை" (பா. 8) "நெய்தல் வாழ் புனற் படப்பை நீடூரானை" (பா. 9) என்றெல்லாம் திருநாவுக்கரசர் தேவாரத்து வருந்தொடர்கள் ஆழ்ந்துணர்தற் குரியன.

" நாறு விரைப்பூஞ் சோலைகளின், நனைவாய் திறந்து பொழி செழுந்தேன் ஆறு பெருகி வெள்ள மிடும் வயல்களில், மள்ளர்கள் உழுகின்ற சேற்றிலும் நறுமணம் கமழுகின்ற நீடூர்" என்று (முனையடுவார் புராணம் — பா. 1) புகழுகின்றார்

சேக்கிழார். இக்குறிப்புக்கள் அனைத்தும் தருகின்ற செய்திகள் யாவை? சற்றேறத்தாழ இரண்டாயிரம் ஆண்டுகளாக நீடூர் விளங்கி வரும் தலம் என்பதும், இயற்கை அழகுடைய மருத நிலத்து ஊர்களுள் ஒன்றாக விளங்கி வருகின்றது என்பதும், ஆகும்.

**பெயர்க் காரணம் :**

இனி, 'நீடூர்' என்ற பெயர்க்காரணம் சிந்திக்கத் தக்கது ஆகும் 'நீண்டு' என்பது 'நீடு' என்று இடைக்குறையாக வரும், 'நிலமிசை நீடு வாழ்வார்' என்ற குறட் பகுதியிலும் இதனைக் காணலாம். 'நின்று நிலைத்திருக்கும் பெரும்புகழ் உடைய ஊர்' என்று பொருள்கொள்ளுமாறு இப்பெயர் அமைந்துள்ளது. இசையும் வீரமும் ஆகிய இருநிலைகளிலும் பெரும்புகழ் நீடியதாக இருத்தலால் சங்க காலத்தில் 'நீடூர்' என்ற இந்த நல்லூர் வழங்கப் பட்டதாகலாம் அதுவே தொடர்ந்து நிலைபெறலாயிற்று.

'ஊழிக்காலத்திலும் அழியாமல் நிலைத்திருக்கும் தலமாதலின் நீடூர்', என்று இதற்கமைந்த தல புராணத்தில் காரணம் உரைக்கப் படுகின்றது. "பிரளய காலம் வரினும் சிதையாதாலே, ஒப்பரிய நீடூர் என்று ஒரு திருப்பேர் எப்பொழுதும் உரைப்பர் மாதோ" என்பது புராணப் பாடற் பகுதி.

**மகிழடி மாண்பு :**

•வகுளாரணியம், மகிழாரணியம், மகிழவனம் என்ற பெயர்களால் தலபுராணம் இவ்வூரைச் சுட்டு

கின்றது. மகிழமரங்கள் அடர்ந்திருந்தமையால் இப்பெயர்கள் உண்டாயின எனலாம். இதற்கேற்பத் தலவிருட்சம் மகிழமரமாக இன்றும் உள்ளது அடர்ந்தோங்கிய மிகப்பழைய மகிழடி இத்திருக்கோயிலுக்குப் பெருஞ் சிறப்புத் தருவதாக உள்ளது. திருவொற்றியூர் மகிழடியைக் காணும் அன்பர்களின் சிந்தனையிற் கொண்டுவருகின்றது இந்த மகிழமரத்து நிழல்.

**மூர்த்திச் சிறப்பு :**

இத்திருத்தலத்தில் இறைவன் பாடல்பெற்ற பழையவனாய் அருள் வழங்குகின்றான். கானநிர்த்த சங்கரர், சோமநாதர், பாடியாடிய தேவர் என்பன திருப்பெயர்கள் இறைவிக்கு வேயுறுதோளியம்மை, அதிகாந்தியம்மை, வேதநாயகி என்ற திருப்பெயர்கள் வழங்குகின்றன. சுந்தரர் தேவாரப்பதிகத்தில், "**பாடியாடும்பரிசே புரிந்தானை**" (பா. 6) என வருவது, கான நிருத்த சங்கரர் என்ற பொருளை விளக்குவது நுட்பமாக அறிந்து உணரத்தக்கது. '**பாடி**' என்பது '**கானம்**' என்ற சொல்லுக்கும், '**ஆடும்**' என்பது '**நிருத்தம்**' என்ற சொல்லுக்கும் மூலமாக அமைந்துள்ளன. இறைவியை, "**வேய்கொள்தோள் உமை**" (பா. 8) என்று சுந்தரர் குறித்துள்ளவாறே இன்றும் வழங்குவது இன்புற்றுணரத்தக்கது. இறைவன் சுயம்புமூர்த்தியாக விளங்குகின்றான். நண்டு பூசித்து தன்னோடு கலக்க அருள்செய்த பெருமான் என்பதை உலகம் உணர்தற்காகத் தன் திருவுருவத்தின் உச்சியில் 'வளை' ஒன்றுடன் காட்சி

தருகின்றான். நவகோள்களில் சூரியன், சந்திரன் திருமேனிகள் உள்ளன. நால்வர் திருவுருவங்கள், இந்தத் தலத்தில் தோன்றிய முனையடுவார் நாயனார் திருவுருவங்கள் அழகு வாய்ந்தவை. சப்த மாதாக்கள் அருட்காட்சி வழங்குகின்றனர். முருகன் பார்க்கப் பார்க்க அழகொழுகும் காட்சி வழங்கி இரு தேவியரோடும் அருட்கோலம் காட்டுகின்றான். சிவலோகநாதர், கைலாயநாதர், விசுவநாதர் — அழகான சிவலிங்கத் திருவுருவங்கள். பத்திரகாளி பூசித்து வழிபட்ட புராணச் சிறப்புத் தோன்ற திருக்கோயிலுக்கு வெளியே அருட்கோலம் வழங்குகின்றாள். கண் கண்ட தெய்வமாக — விளங்கும் ஆலாலசுந்தரி அம்பிகையாக அன்பர்கட்கு இருமைப் பேறுகளையும் வழங்கி வருகின்றாள்.

### தீர்த்தத் திறம் :

இத்தலத்திற்கு அமைந்த புராணத்தினின்றும் அறியப்பெறும் தீர்த்தங்கள் ஒன்பது உள்ளன. ஆனந்த தீர்த்தம், செங்கழுநீர் ஓடை, சூரிய தீர்த்தம், சந்திர தீர்த்தம், இந்திர தீர்த்தம், பத்திரகாளி தீர்த்தம், முனிவரர் தீர்த்தம், பருதி குண்டம், வருண தீர்த்தம் என்பன அவை.

### வழிபட்டோர் :

தலபுராணத்தால் அறியப்பெறும் செய்திகளில் இந்திரன் வழிபட்டமை, சந்திரன் வழிபட்டமை, பத்திரகாளி வழிபட்டமை, நண்டு வழிபட்டமை சூரியன் வழிபட்டமை, செம்பியன் வழிபட்டமை

ஆகியவை அறியப்பெறுகின்றன. திருநாவுக்கரசு சுவாமிகளும், சுந்தரரும் வழிபட்டமை திருத்தொண்டர் புராணத்தால் அறியப்பெறும். இப்புராணத்தாலறியப்பெறும் வழிபட்டோர் பெருஞ் சிறப்புக்களை இனிச் சுருக்கமாகக் காணலாம்.

திருப்பள்ளியெழுச்சியில், மணிவாசகர் கடைசிப் பாட்டில் உணர்த்தும் ஓர் உண்மை அறியத்தக்கது. வானிடத்தில் வாழுகின்ற தேவர்களும்கூட இறைவன் திருவருளை வேண்டுவராயின் மண்ணுலகிற்குப் போந்து வழிபட்டே இருமைப் பயன்களைப் பெறுகின்றனர் என்பதே அது. 'புவனியிற் போய்ப் பிறவாமையின் நாள் நாம் போக்குகின்றோம் அவமே; இந்தப் பூமி சிவன் உய்யக் கொள்கின்றவாறு' என்று கருதியே திருமாலும், பிரமனும் முதலியவர்கள் மண்ணுலகிற்கு வந்து பூசிப்பர் என்று அறிதல் வேண்டும். சிவஞான சித்தியாரில் வரும் இனிய விருத்தம் இப்பேருண்மையை இன்னும் தெளிவாக எடுத்துணர்த்துகின்றது.

" மானுடப் பிறவிதானும்
வகுத்தது மனவாக்காயம்
ஆனிடத் தைந்துமாடும்
அரன்பணிக்காக அன்றோ
வானிடத்தவரும் மண்மேல்
வந்து அரன்தனை அர்ச்சிப்பர்
ஊனெடுத் துழலும் ஊமர்
ஒன்றையும் உணரார் அந்தோ "

வானுலகில் உள்ள தேவரும் மண்ணிற்கு வந்து அரனை வழிபடும் நிலையைக் கேட்டும், வழிபடுதற்

கென மக்கள் உடம்பை எய்தியவர்கள் வழிபடாது நிற்றல் அறியாமை என்று கூறி அவர்களுக்காக இரங்குகின்ற கனிவினை இங்குக் காண்கின்றோம்.

## இந்திரன் பூசித்த எழில் :

மிகு பழங்காலத்தில் இந்திரனும் ஏனைய தேவர்களும் காவிரிக் கரையில் தமிழ் நாட்டில் சிவபூசை செய்தற்கான தலம் எது என்று நாடினர். காவிரி நதியின் வடகரையில், மகிழவனம் ஆகிய நீடூரைக் கண்டு, செங்கழுநீர் ஓடையின் அழகில் ஈடுபட்டு அங்கேயே வழிபடலாம் என்று மகிழ்ந்தனர். பொன்விமானத்தினின்றும் இறங்கி மகிழவனத்திற் புகுந்தான் இந்திரன். சிவலிங்கம் நிறுவி மந்திர விதியால் மார்கழித் திருவாதிரையன்று வழிபட்டான். வழிபட்டு இந்திரன் பலவாறாகச் சிவ பிரானைப் பாடிப் போற்றினன்.

" ஆதியே! மெய் அருளின் சலதியே!
சோதியே! செஞ்சுடர்க்
கொழுந்தே! உமை
பாதியேயும் பரம்பொருளே! மறை
நீதியே! மகா நின்மல மூர்த்தியே "

(நீடூர்த் தலபுராணம் - இந்திரன் பூசைச் சருக்கம்-20)

என்பது முதலாகப் பலவாறாக இந்திரன் உள்ளம் உருகிப் போற்றினன். இந்திரனுடைய பூசைக்குத் திருவுள்ளம் இரங்கினன் அருட்சோம நாதனும் பரமன். சிவலிங்கத் திருமேனியினின்றும் பாடியாடும் தேவனுக எழுந்தான். 'செஞ்சடைக்காடு

தோன்றச் சிறுபிறைக்கொழுந்து தோன்றக் கையில் வெஞ்சூலம் தோன்றக் கறைஒளிமிடற்றில் தோன்ற' ஐயன் ஆனந்த கானத்து அணிநடம் செய்தான் என்கின்றது புராணம். (கான. பா. 3)

கான நிர்த்தனம் செய்த இறைவனை நோக்கி இந்திரன் பணிந்து பின்வருமாறு வேண்டிக் கொண்டான். "மாதொரு பாகம் கொண்ட இறைவ! என்னுடைய பூசைக்கு மனமகிழ்ந்து இவ்வாறு மார்கழித் திங்கள் திருவாதிரையில் நடனம் புரிந்தது போன்றே, யாவரேனும் இந்த நீடூரில் மார்கழித் திருவாதிரையில் ஆனந்தத் தீர்த்தத்தில் நீராடி, உன்னைத் தரிசனம் செய்தால் பன்னிரண்டு ஆண்டுகளில் பலன் வழங்கியருள் வாயாக. அன்றியும் புகழ், உண்மை, ஞானவாழ்வு, எட்டுவகைச் செல்வங்கள், முத்தி அனைத்தும் கொடுத்தருளி, இந்த மகிழவனத்தில் இலிங்க வடிவ மாக இருந்து ஞான நடனம் புரிந்தருள்வாயாக"

இந்திரனின் வேண்டுகோட்படி, இறைவன் ஞான நிருத்தனம் செய்து அன்பர்கட்கு அருளினன் ஆண்டுதோறும் மார்கழித்திங்கள் திருவாதிரை யன்று அருட்சோமநாதரின் கான நிருத்தம் செய்து வேண்டுவோர் வேண்டுவதை அருள் செய்கின்றான். இந்திரனது வேண்டுகோள் இதயத்தை உருக்குவ தாக அமைந்த நறுங்கவிதையாகப் புராணத்தில் உள்ளது.

"நாத! இந்த மார்கழித் தினத்தில் மிக்க
நாளில் உன்
பாததாமரைக்குளன்பு பற்று தொண்டர் பாதகம்

சோதிவீசு தீயினிற் சொரிந்த பஞ்ச தாகியே
தீதகற்றி நற்கதிச் சிறப்புநல்க வேண்டுமே''

(கான நிர்த்த. 25)

## ஆதித்தன் வழிபட்ட நிலை

சூரியன் இறைவனுடைய வலக்கண்ணாக உள்ளவன் வில்வத்திேைடும் புறப்பட்டுச் சூரியன் இறைவனை எண்ணி மேருமலையில் தவம் செய்து கொண்டிருந்தான். இறைவன் சூரியன் முன் தோன்றி, ''காவிரியின் வடகரையில் உள்ள நீடூர் என்ற தலத்தில் யோக புட்கரணி உள்ளது. அதன் கீழ்த்திசையில் மகிழமனத்தில் செங்கழுநீர் ஓடை உண்டு. அந்த வகுளாரணியத்தில் அதிகாம்பிகையாகிய வேயுறு தோளியோடு நாம் உறைவோம். நீ அங்கு வழிபடின் அருள்தருவோம்'' என்று கூற ஆதித்தன் நீடூர்க்கு வந்து ஆனந்த தீர்த்தத்தின் மூழ்கிச் செங்கழு நீரோடையில் நீராடிப் பெருமானை வழிபட்டான். சூரியனின் பூசைக்கு உளமுருகி வெளிப்பட்டான் இறைவன்.

•

''திருமால் பிரமன் முதலியோர் கோடி வருடமாகத் தேடியும் காணவியலாத நின் திருவடிகளை ஞாலமீது எளிய எனக்கு ஒரு நாளில் அளித்தருளிய பெருங்கருணையை விரித்துரைக்கவேண்டும்'' என்று கேட்டுக்கொண்டான் சூரியன். ''ஆவணித் திங்களில் முதல் நாளான ஞாயிறு வாரத்தில், ஆனந்த தீர்த்தத்தினீரும், நீ கண்ட தீர்த்த நீரும், செங்கழு நீரோடை நீரும் கொண்டு திருமஞ்சனம் செய்து வில்வத்தால் அருச்சனை செய்து பூசித்த புனிதப்

பலனே '' என்று கூறி வில்வத்தின் பெருமையை விளக்கமாக அருளினுன் அண்ணல்.

" ஆவணித் திங்களிலும், சித்திரைத் திங்களிலும் வைகறை நேரத்தில் சூரிய தீர்த்தத்தில் மூழ்கி, மிகப்புனிதமாகிய வில்வதனத்திஞலே அர்ச்சனை செய்து உன்னைப் பூசித்தவர்க்கு அருள் பாலிக்க வேண்டும் '' என்று வேண்டினுன்; அவ்வாறே இறைவனும் அருளினுன். ஆதலால் ஆவணி ஞாயிறுகளில் இங்குவந்து நீராடுவது எல்லாச் செல்வங்களையும் தரும் என்கின்றது புராணம் (சூரியன் பேறு பெற்ற சருக்கம் - பா. 9, 10)

வில்வச் சருக்கம் என்ற பகுதியில் சிவபிரானுக்கு உகந்த வில்வத்தின் பெருமை 29 திருப்பாடல்களால் உரைக்கப் பெற்றுள்ளது.

" திங்கள்எத் திங்களேனும் தினங்கள் எத்
தினங்களேனும்
தங்கும்எப் பகற்போதேனும் தயங்குமெவ்
விருட்போதேனும்
பொங்கும்எக் காலமேனும் பொருந்துமுக்
கிளைவில்வத்தைச்
செங்கையால் எடுத்துச்சாத்திற்
சிவகதிசேர்வர் மன்னே "

(-வில்வச் சருக்கம் 24)

என்ற தலபுராணப்பாடல் வில்வத்தின் மேன்மையை இனிது விளம்புகிறது.

### சந்திரன் பூசித்த சால்பு :

சந்திரன் தனக்குற்ற நோயைப் போக்க இறைவனிடம் வேண்டினுன். 'கற்பக நன்னிழல் இருக்கும் இந்திரனே முதலாய கடவுளோர்க்கும் தினகரனுக்கும், நீடூரில் பற்பல நல் வரம் கொடுத்தோம்; நீயும் அந்த நீடூராம் பதியின் ஏகி அருச்சிக்க'' என்ருன் இறைவன். அவ்வாறே வழிபட்டுச் சாரூபம் பெற்ருன்; இறைவனும் சோமநாதன் என்ற பெயர் ஏற்ருன். சந்திர தீர்த்தம் சந்திரன் அமைத்து வழிபட்ட தீர்த்தம் ஆகும். அத்தீர்த்தத்தின் மூழ்கி வழிபடுவோர்,

'' யாவரேனும் எழுகடல் சூழும் இப்
பூவேலாம் அரசெய்திப் புரந்தபின்
மூவருக்கு முதற்பொருளாகிய
தேவதேவன் திருவடி சேர்வரே ''

(சந்திரன் பூசை. 28)

என்கின்றது தலபுராணம்.

### நண்டு வழிபட்ட நலம் :

அலவன் பூசைச் சருக்கம் என்ற பகுதியில் நண்டு வழிபட்ட திறம் நவிலப்பட்டுள்ளது. ஒரு காலத்தில் கேதாரம் என்ற தலத்தில் தன்மசுதன் என்றெரு தியவன் மறையோர் குலத்தில் வாழ்ந்தான். பல பாவச் செயல்கட்கு உறைவிடமானவன் அவன். எண்ணற்ற பாவச்செயல்கட்கு இலக்காகிய அவன் இறுதியில் நரகத்தில் வீழ்ந்தான். மறுபிறப்பில் கொடிய இராக்கதனுக அவன் தோன்றினுன்,

நாரத முனிவனைக் கண்டு, கரையேறும் வகை வேண்டினான். நாரதன் "நீடூர்த் தலத்து நலமெலாம் விரித்துரைத்து, நண்டாகப் பிறந்து முன் செய்த சிவபூசைப் பலத்தால் இங்கு வந்தாய். நருமதையில் மூழ்கினால் இராக்கதப் பிறப்புத் தீரும். மகிழவனம் புகுந்து, எருக்க மலர் ஒன்றினால் பெருமானை வழிபட்டு நற்கதி பெறுக" என்றபடியே, நருமதையில் முழுகி காவிரி வடகரையில் ஞான நண்டாகத் தோன்றினான். அந்த நண்டு முறைப்படி சோமநாதப் பெருமானை நாளும் வழிபட்டது. எண்ணற்ற ஆண்டுகள் ஞானநண்டின் வழிபாட்டை ஏற்றுக் கருணைகூர்ந்து, தன் திருவடிப்பேறு நல்கினான் சிவபிரான்.

இறைவன் அந்த நண்டினைத் தனக்குள் ஒன்றாக்கிக்கொண்டதன் அடையாளமாக, நண்டின் வளை இன்றும் சிவலிங்கத் திருமேனியின் உச்சிப்புறத்து இருக்கின்றது. இதனைப்புராணமும், " அவ்வலவன் அடைந்ததனி அடையாளம் யாவரும் கண்டு அறியலாகும் " (அலவன் பூசை 50) என்று குறிக்கின்றது.

**ஆலால சுந்தரியின் வழிபாடு :**

பத்திரகாளி 'கேதாரம் காசி முதல கிளர் தலங்கள் சென்று இறைவன் பாதார விந்தம் பணிந்தேத்திய பிறகு' வகுளாரணியம் என்னும் நீடூர்க்கு வந்து, காவிரியில் நீராடி செங்கழுநீர் வாவியில் தீர்த்தமாடினாள். பிற தீர்த்தங்களிலும் மூழ்கி கான நிருத்த சங்கரரை இத்தலத்து வழிபட்டாள்.

நவக்கிரகங்களால் வரும் குற்றங்களையும் பிறவற்றை யும் நீக்கியருளல் வேண்டுமெனப் பெருமானை வரம் கோரிநின்றாள் பத்திரகாளி. ஆலால சுந்தரி என்ற பெயருடன் நீடூரைக் காக்கும் திருப்பணி தரப் பெற்றாள்

இன்றும் திருக்கோயிலின் முன்புறத்தே வடக்கு நோக்கிய சந்நிதியோடு பத்திரகாளி ஆலால சுந்தரி என்ற திருப்பெயருடன் திருக்கோயில் கொண் டுள்ளமையைக் கண்டு போற்றலாம். இதனைத் தலபுராணம் பின்வரும் அழகிய பாடலாற் கூறு கின்றது.

'' வேண்டுவரம் பலகொடுத்து விளங்குபுகழ் நீடூரைப்
பூண்டருகாப் பென்னுளும் புரிதியெனக் கற்பித்து
நீண்டசடை முடக்கடவுள் நிறைந்திருப்ப எப்போதும்
கூண்டகணத் துடன்காளி யத்தலத்திற் குடிகொண்டாள் ''

(ஆலாலசுந்தரி பூசை 19)

**வளவனும் வழிபட்டான் :**

சோழ மன்னன் ஒருவன் (பெயர் சுட்டப்பெற வில்லை) நாடு வறண்ட பஞ்சக் காலத்து இத்திருத் தலத்திற்குப் போந்து பெருமானை வழிபட்டான். இறைவன், '' வளவனே! நின் பெரும் பூசைக்கு மகிழ்ந்தோம். பன்னிரண்டாயிரம் கலம் விளையக் கூடிய நிலத்தை நிவந்தமாக இத்திருக்கோயிற்கு விடுத்திடுக; நலம் விளையும் '' என்றருளியபடியே நிவந்தம் அளித்தான் மன்னன். அவ்வாறே அச் செம்பியன் அளித்திட நாடு மழை பெய்து செழித்

தது. பெருமழை விடாது பொழிந்து துன்பமுறுத்தலும், அனைவரும்கூடி மகிழவனத்துப் பெருமானைத் தொழுது அவரது திருவருளாணைப்படித் திருப்புன்கூர் சென்று முறையிட்டனர். பன்னீராயிரக் கலம் விளையும் நிலப்பகுதியைத் திருநீடூரார்க்கு ஈந்தபடியே திருப்புன்கூராார்க்கும் அளித்திட்டால் மாரியால் வரும் துன்பம் நீங்கும் என்றனன் பெருமான். அவ்வாறே சோழன் திருப்புன்கூர்ப் பெருமானுக்கு நிலம் வழங்கி வழிபட்டான்; வையகம் செழித்தது.

தலபுராணத்தால் அறியப்பெறும் வழிபாட்டுச் செய்திகளாக மேற்கூறப்பெற்றவை அனைத்தும் கொள்ளத்தக்கன. இனி நாயன்மார்களுள் அப்பரும் சுந்தரும் இத்தலத்தை வழிபட்ட திறத்தைச் சேக்கிழார் கூறுவது நம் சிந்தனைக்கு உரியதாக உள்ளது.

### திருநாவுக்கரசரும் நீடூரும் :

திருக்கோலக்காவைத் திருஞானசம்பந்தரும் திருநாவுக்கரசரும் சென்று இறைஞ்சி வழிபட்ட பிறகு, மீண்டருளினார்கள். அப்பர் சம்பந்தரிடம் விடைபெற்றுக்கொண்டு கருப்பறியலூர் (தலைஞாயிறு), புன்கூர் வழியாகத் திருநீடூர் வந்து வழிபட்டுப் பிறகு திருக்குறுக்கை, திருநின்றியூர், திருநனிபள்ளி (புஞ்சை என இப்போது வழங்குகின்ற தலம்) சென்றதாகச் சேக்கிழார் பாடுகின்றார்.

"ஆண்ட அரசெழுந்தருளக் கோலக்காவை
அவரோடும் சென்றிறைஞ்சி அன்புகொண்டு

மீண்டருளினாவரும் விடைகொண்டிப்பால்
வேதநாயகர் விரும்பும் பதிகளான
நீண்ட கருப்பறியலூர் புன்கூர் நீடூர்
நீடுதிருக் குறுக்கை திருநின்றியூரும்
காண்டகைய நனிபள்ளி முதலா நண்ணிக்
கண்ணுதலார் கழல்தொழுது கலந்துசெல்வார்"
(திருநாவுக்கரசர் புராணம்-189)

திருப்புன்கூர், திருநீடூர் ஆகிய இருதலங்களையும் இணைத்து அப்பரடிகள் பாடிய "**பிறவாதே தோன்றிய பெம்மான் தன்னை**" எனத் தொடங்கும் திருத்தாண்டகம் ஒன்று உள்ளது. இப்பதிக்கத்தின் தொடக்கமே, நீடூர்ப்பெருமான் சுயம்பு வடிவம் என்பதனைக் குறிப்பாக உணர்த்துகின்றமை சைவ மெய்யன்பர்கள் உளங்கொண்டு போற்றற்குரியது. சேத்திரக் கோவைத் திருத்தாண்டகத்தில், "நின்றியூர் நீடூர் நியமநல்லூர்" (அப்பர்-2790) என்றும், திருப்பள்ளியின் முக்கூடல் திருத்தாண்டகத்தில், "நிதியாளன் தோழனை நீடூரானை" (அப்பர்-2782) என்றும் இத்திருத்தலத்தை அப்பரடிகள் நினைவு கூர்ந்து போற்றியுள்ளார்.

## சுந்தரரும் நீடூரும்

சுந்தரர் திருநின்றியூர் சென்று வழிபட்டு, செப்பரிய புகழ் நீடூரைப் பணியாது செல்லுகின்ற பொழுது மெய்யுணர்வினால் இத்தலத்து நினைவு எழுந்து இங்குவந்து, "ஊர்வதோர் விடையானை" என்ற திருப்பதிகத்தைப் பாடியருளினார். "நீடூர்ப் பெருமான்

தாள்களை வணங்காது விடலாமோ?" என்ற கருத்துடன் பாடி வணங்கி இத்தலத்துத் தங்கியிருந்தார் என்று சேக்கிழார் கூறியுள்ளார்.

"அப்பதியில் அன்பருடன் அமர்ந்து அகல்வார் அகலிடத்திற்
செப்பரிய புகழ் நீடூர் பணியாது செல்பொழுதில்
ஒப்பரிய உணர்வினால் நினைந்தருளித் தொழலுறுவார்
மெய்பொருள் வண்டமிழ்மாலை விளம்பியே மீண்டணைந்தார்"

"மடலாரும் புனனீடூர் மருவினர்தாள் வணங்காது
விடலாமே எனுங்காதல் விருப்புருமத் திருப்பதிகம்
மடலார்சூலப் படையார் தமைப்பாடியடி வணங்கி
உடலாரு மயிர்ப்புகை மிகப்பணிந்தங் குறைகின்றார்"

(ஏயர்கோன். 151, 152)

என்ற திருப்பாட்டுகள் இவ்வுண்மையினை உரைக்கின்றன. "உறைகின்றார்" என்பதனாலும், "அங்கன் இனிது அமர்ந்து" (153) என்று அடுத்து வருவதனாலும் சுந்தரர் நீடூரில் தங்கியிருந்தார் என்று கொள்ளலாம்.

o

## முனையடுவார் வாழ்ந்த திறம்

அறுபத்து மூவர் நாயன்மாரில், முனையடுவார் என்பார் இத் திருதலத்து வாழ்ந்து திருத்தொண்டு செய்து இறைவன் திருவடி உற்றார் என்று திருத்தொண்டர் புராணம் கூறுகின்றது. ஐந்தே திருப்பாடல்களால் இவர் திருவரலாறு கூறப்பெற்றுள்ளது. இவர் வேளாண் குடியிற் பிறந்தவர் போர்களத்து வீரம்காட்டிப் பொருது கொண்டு வந்த வளத்தால் மகேசுவரபூசை முதலியன செய்து

தொண்டர்க்குச் சிறப்புச்செய்தவர் இவர். போரிற் பகைவர்க்குத் தோற்றவர்கள், இவர்பால் வந்து வேண்டினால் கூலி ஏற்று, கூற்றுவனும் அஞ்சும் ஆள்வினை காட்டிப் பொருவார் இவர். நீண்டநாள் அப்பொருளாலே அடியவர் வழிபாடு செய்து சிறந்தார். "போர் முனையில் சென்று மாற்றாரைக் கொல்லுவார்" என்ற காரணப் பெயராக இவரது 'முனை அடுவார்' என்னும் பெயர் வழங்கலாயிற்று. நேரிய வழியில் வீரம்காட்டிப் பொருள் ஈட்டி சிவப் பணி செய்த இவருடைய திறம் ஒருவகையால் திருமங்கையாழ்வாருடைய திருப்பணியோடு ஒத்தது எனலாம்.

சங்ககாலத்தே சிறப்புற்று விளங்கிய வேள் எவ்வியின் வீர மரபிலே, வேளாண் குடியில் வந்தவராக இம்முனையடுவாரைக் கொள்ளுவது பொருந்தும்.

இவருடைய அயரா அன்பினைச் சேக்கிழார், "யாவரெனினும் இகலெறிந்தே ஈசனடியார் தமக்கின்ப, மேவவளிக்கும் முனையடுவர்" என்று குறித்து மகிழ்வர். (முனையடுவார் புராணம்-6)

இவருடைய திருவுருவம் இறைவனைக் கும்பிட்ட பாங்கில் இத்திருக்கோயிலில் இன்னும் உள்ளது. கையில் வாளுடன், கனிந்த நெஞ்சுடன், தொழுத கரங்களுடன் கூடிய இத்திருவுருவம், காண்போர் மனத்துத் திருத்தொண்டின் மாட்சியை விளைப்பதாக உள்ளது.

## தலபுராணம்

இத்திருத்தலத்திற்குத் தமிழ் செய்யுட்களால் இயன்ற ஒரு தலபுராணம் உண்டு. 'திருநீடூர்த்தல புராணம்' என்ற பெயருடைய அந்நூலை வடமலை நாரணக்குடை மன்னர் இயற்றினர் என்பர். இதன் முதற்பதிப்பு 1908ல் திரு வ. த. சுப்பிரமணிய பிள்ளையவர்களாற் சுவடியினின்று எடுத்து அச்சிட்டு வெளிவந்துள்ளது. தலமான்மியச் சருக்கம் முதலாகத் தீர்த்துச் சருக்கம் ஈருக நானூறு திருப்பாட்டுக்களான் இயன்றது இந்நூல். சற்றேறக் குறைய இருநூறு ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த இந்நூலாசிரியர் வடமலைப் பிள்ளையன் என்றும் வழங்கப்பெறுவர். மச்சபுராணம் இவரால் இயற்றியப்பெற்ற மற்ருெரு நூல் சைவ வேளாளர் குலத்தவர் இவர்; துகிலி கஞ்சனூரைச் சேர்ந்த **சுவாமிநாத தேசிகர்** இவருடைய ஞானுசிரியர் என்பது இப்புராணத்தால் அறியப் பெறும். இந்நூலின் நடை எளியது; அழகிய கவிதைகள்; சித்திரக்கவி யாப்பிலும் பல அமைந்து, கவித்திறனைக் காட்டி நிற்கின்றன.

## திருக்கோயில் அமைப்பழகு

இத்திருக்கோயில் கிழக்கு நோக்கிய அமைப்புடையது. தென்புறம் அழகிய திருக்குளம் படிக்கட்டுகளை உடையது. அரசமரம் ஒன்று நீண்டு ஓங்கித் தழைத்துக் கரையில் உள்ளது. வடக்கு நோக்கிய படி ஆலாலசுந்தரி அம்பாள் திருக்கோயில்

மதிற்புறம் தாண்டிச்சென்ருல் தென்புறமாக மகிழ மரம் – தலவிருட்சம் அடர்ந்து செழித்து கீழே மேடையுடன் உள்ளது. புன்னிருக்கு வேளூர் வேம்படியையும், திருவொற்றியூர் மகிழடியையும் நினைவுபடுத்தும் இம்மகிழடி. தெற்கு நோக்கிய அம்பாள் திருக்கோயில் உள்ளே புகுந்ததும் மிகப் பெரிய அர்த்தமண்டபம். அதைக் கடந்து திருச்சுற்றிற் செல்கின்ருேம். சோமநாதரை வழிபட்ட நால்வர்; பைரவர், சப்தமாதாக்கள், சுப்பிரமணியக் கடவுள் வழிபாடு முடித்தால், சிவலோகநாதரையும், கைலாயநாதரையும், விஸ்வநாதரையும் தரிசிக்கலாம். அடுத்துத் திருமகள், சண்டிகேசுவரர், வேதநாயகி, சனீசுவரர் முதலிய தரிசனம் செய்து கொள்ளலாம்.

அழகான கூத்தபிரான் திருக்கோலம் தென்பால் உகந்ததாகும் திருக்காட்சி. இறைவன் சுயம்புமூர்த்தியாக - நண்டு வழிபட்ட அடையாளத்துடன் உள்ளே எழுந்தருளியிருக்கின்ருன் உற்சவமூர்த்தங்களில், சோமாஸ்கந்தர், பிரியாவிடையம்மன், வேதநாயகி, போகசக்தி, முருகன், வள்ளி, தேவயானை, முனையடுவார், இந்திரன், பத்திரகாளி, மாரியம்மன் அழகானவை. பெருமாள் கோயிலிலிருந்து கொணரப்பட்டுள்ள, லட்சுமிநாராயணர் கோயிலைச் சேர்ந்த இராமன், இலக்குவன், சீதை, ஆஞ்சநேயர் உருவங்களையும் கண்டு இன்புறலாம்.

## கல்வெட்டுக்கள்

இத்திருக்கோயிலின் திருமதில் தென்புறச் சுவரில் வெட்டப்பட்டுள்ள கல்வெட்டுக்கள், 1921-

ஆம் ஆண்டில் அரசினரால் படியெடுக்கப்பெற்றுள் ளன. அவற்றுள் இரண்டு கல்வெட்டுக்களில் இரண்டு செய்யுட்கள் காணப்படுகின்றன;

## முதற் கல்வெட்டு

"ஆரியவுலக மனைத்தையுங் குடைக்கீழ்
ஆக்கிய குலோத்துங்க சோழற்
காண்டொரு நாற்பத் தாறிடைத் தில்லை
யம்பலத் தேவடகீழ்பாற்
போரியன் மதத்துச் சொன்னவாறறிவார்
கோயிலும் புராண நூல்விரிக்கும்
புரிசை மாளிகையும் வரிசையால் விளங்கப்
பொருப்பினுஞ் சிறப்புறச் செய்தோன்
நேரியற் காண்டே ழைஞ்சுடன் மூன்றில்
நிகரிலாக் கற்றளி நீடூர்
நிலாவினுற் கமைத்த நிலாவினனமுத
சாகர னெடு (ந்தமிழ்த்) தொகுத்த
காரிகைக் குளத்தூர் மன்னவன் தொண்டை
நாவலன் சிறுகுன்ற நாட்டுக்
கற்பக மிழலை நாட்டு வேளாண் (மை)
கொண்) டவன் கண்டன் மாதவனே"

## இரண்டாம் கல்வெட்டு

"எண்டிசை யுலகை யொருடை நிழற்கீழ்
இருத்திய குலோத்துங்க சோழற்
கியாண்டொரு முப்பத்தெட்டினிற் சோணாட்
டிசைவள ரிந்தளூர் நாட்(டுள்)
உண்லட நீடிய நீடுருமை யோடு
(மு) லாவிய (சிவ) பொருமா(னு) க்
குவந்து (வெண்கயி) லை மலையெனச் சிலையா

லுத்தம விமானமிங் கமைத்தான்
தண்டமி ழமித சாகர முனியைச்
சயங்கொண்ட சோழ மண்டலத்துத்
தண் சிறு குன்றநாட் டகத்திருத்தி (ச்)
(சந்த) நூற்காரிகை புவனுற்
கண்டவன் மருமான் காரிகை குளத்தூர்
காவல னிலாவினு னெவர்க்குங்
நருணேயு (நிதியுங்) காட்டிய மிழலே
நாட்டுவேள் கண்டன் மாதவனே".

முதற் குலோத்துங்க சோழனின் 46, 38 வது ஆட்சி யாண்டுகளில் வெட்டப்பட்டவை இவை. காரிகைக் குளத்தூர் மன்னவன், மிழலே நாட்டு வேள், தொண்டை காவலன் என்று சிறப்பிக்கப்பட்ட கண்டன் மாதவன் என்ற சிற்றரசன் அமிதசாகர முனிவரை கண்டு காரிகைநூல் செய்வித்தவனுடைய வழித்தோன்றல் என்பதும், அவன் இத்திருக் கோயில் விமானம் செய்தான் என்பதும் ஆகிய அரிய செய்திகள் இக் கல்வெட்டுக்களாற் புலனுகின்றது. தமிழ் இலக்கிய வரலாற்றிற்குப் பயன்படத் தக்க இக்கல் வெட்டுக்களே இத்தலத்துக் காண்டல் அறிவுலகிற்குப் பெருவிருந்தாக உள்ளது. பேராசிரியர் மு. இராகவ ஐயங்கார் அவர்கள் தம்முடைய சாசனத் தமிழ்க்கவி சரிதத்து, 'அமிதசாகர முனிவர்' என்ற கட்டுரையில் (பக். 40, 41) இதனைக் குறித்துள்ளார்கள். (செந் தமிழ் – 24ம் தொகுதி, பக். 161–70–ல் அமிதசாகரர் என்னும் கட்டுரையும் நோக்கத்தக்கது.) இதற் குறித்த கண்டன் மாதவன், சங்ககாலத்து மிழலே நாட்டு வேள் என்பானின் மரபின் வந்தவனுகக்

கொள்ளப் பெறுகின்றான். இவன் சிறந்த சிவபத்தி உள்ளவன்; முனையடுவார் நாயனாரை இக்கண்டன். மாதவனுடைய முன்னோராகவும் கருதலாம். 'அளப்பருங்கடற் பெயர் அருந்தவத்தோன்' என வரும் யாப்பருங்கலக் காரிகை வழக்கிற் கேற்றபடி, இவ்வூர்க் கல்வெட்டில் 'அமிதசாகரன்' எனவரும் பெயர் அமைகின்றது. 'அமுதசாகரன்' எனவரும் முதற்கல்வெட்டுப்படியும் அப்பெயர் வழங்கப் பட்டதாகலாம்.

மூன்றும் இராசராச சோழன் காலத்தைச் சேர்ந்த இத்தலத்துப் பிறிதொரு கல்வெட்டினால், அறியப்படும் செய்தி:- திருஇந்தளூர் நாட்டு இராச சிகாமணிச் சதுர்வேதி மங்கலத்தில் உள்ள புகழா பரணப் பிள்ளையார் கோயிலில், நாட்டார் கறையானோர் முதலோர் கூடினார்கள்; 1/32 வேலி நிலத்துக்குப் பண்டுபோல் இரண்டு காசு வசூலிப்பதென வும். வெட்டி, விநியோகம் என்பவற்றுக்கு முறையே ஐந்து ஒன்று காசுகள் வசூலிப்பதெனவும், மன்னனைத் தவிர வேறு யாரும் தங்களுக்கு வரி விதிக்கக் கூடாதெனவும் தீர்மானித்தார்கள்.

இதிலிருந்து இந்நீடூர் **இராசாதிராச வளநாட்டுத் திருஇந்தளூர் நாடு** என்ற பகுதியைச் சேர்ந்ததாக அக்காலத்தே இருந்தமை புலனாகின்றது. 'வளநாடு' என்பதை இக்காலப் பகுதியில் 'மாவட்டம்'(District) என்பதனோடும், 'நாடு' என்பதை இக்கால பகுதியில் 'வட்டம்' (taluk) என்பதனோடும் ஒப்பிடலாம். ஆதலால் திருஇந்தளூர் ஒரு பேருராக இருந்து,

இந்தளூர் நாட்டின் தலைநகராக இருந்துவந்துள்ளது என்றும் அறியலாம். சங்ககாலத்தே மிழலைக் கூற்றம்' என்ற பெயருடன் விளங்கிய இப்பகுதி, பிற்காலச் சோழர் காலத்தே, 'திருஇந்தளூர் நாடு' எனவழங்கப்பட்டதாதல் வேண்டும்

## சொத்து - வருமானம் - நிர்வாகம்

இத்திருக்கோயில் வருமானம் ஆண்டொன்றிற்குச் சுமார் ரூ 4000/- மட்டும் ஆகும். உரிய நிலங்கள் புஞ்சை ஏ. 17. 13. இதிற் புஞ்சையில் நஞ்சைப்பகுதிகள் ஏ. 1. 31 ஆகும். திருவாபரணங்கள் மொத்தமதிப்பு ரூ. 800/- மட்டும் என்று அறியத்தக்கது. மூன்று கால பூசனைகளை உடைய இத்திருக்கோயிலை தமிழக இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை ஆணையர் அவர்களின் ப மு. 43460/67 நாள், 17—3—69 ஆணைப்படி, திருஇந்தளூர் பரிமள ரெங்கநாதர் திருக்கோயில் நிர்வாக அதிகாரியே புரந்துவருகின்றார். இப்போது நிர்வாக அதிகாரியாக இருந்துவருபவர் திரு. வி. நாராயணன், பி. ஏ., அவர்கள்.

அறங்காவலராக இருந்து பணிபுரிபவர் திரு. டி. எஸ் வேலாயுதம் பிள்ளை, அவர்கள். 20—2—70 முதல் மூன்றாண்டுகளுக்கு இவரை ஒரே அறங்காவலராக அமர்த்தியிருக்கிறது அறநிலையத்துறை ஆணையர் திரு. கே. எஸ். நரசிம்மன், ஐ. ஏ. எஸ். அவர்களுடைய கணிந்த உள்ளமும், ஆழ்ந்த பக்தியும் துணையாக இத்திருக்கோயில் பெற்றுவரும் நலங்கள் பல. தஞ்சை மாவட்டத் துணை ஆணையர் திரு. வி. எஸ்.

கோதண்டபாணி அவர்கள் பி. எஸ்சி., பி. எல். பக்தி உணர்வினாலும், நாகை உதவி ஆணையர் திரு. புலியூர் உடையான் அவர்களது செயல் வளத்தாலும் இத்திருக்கோயில் பல திருப்பணிகள் செய்யப்பெற்றுத் தெய்வவிளக்கம் காணும் என்பது உறுதி. நின்றுபோயிருக்கும் திருவிழாக்கள் மீண்டும் நடைபெற்றிடச் சைவ மெய்யன்பர்கள் திருக்கோயிற் பணியாளர்களோடும் இணைந்து பணி புரிந்திடவேண்டும் என்பது இத்தல வரலாற்றாசிரி யரின் அன்பான வேண்டுகோள் ஆகும்.

---

## சுந்தரர் அருளிச்செய்த திருப்பதிகம்

---

**பண் – தக்கேசி**

ஊர்வதோர் விடை ஒன்றுடையானை
ஒண்ணுதற்றனிக் கண்ணுதலானைக்
காரதார் கறை மாமிடற்றானைக்
கருதலார்புரம் மூன்றெரித்தானை
நீரில் வாளை வரால் குதி கொள்ளும்
நிறை புனற் கழனிச்செல்வ **நீடூர்ப்**
பாருளார் பரவித்தொழ நின்ற
பரமனைப் பணியா விடலாமே. (1)

துன்னு வார்சடைத் தூமதியானைத்
துயக்குறவகை தோற்றுவிப்பானைப்

பண்ணு நான்மறை பாடவல்லானைப்
பார்த்தனுக்கருள் செய்த பிரானை
என்னை இன்னருள் எய்துவிப்பானை
ஏதிலார் தமக்கேதிலன் றன்னைப்
புன்னை மாதவி போதலர் நீடூர்ப்
புனிதனைப் பணியா விடலாமே. (2)

கொல்லும் மூவிலை வேலுடையானைக்
கொடியகாலனை யுங்குமைத்தானை
நல்லவாநெறி காட்டுவிப்பானை
நாளும் நாம் உகக்கின்ற பிரானை
அல்லலில் அருளே புரிவானை
ஆடுநீர்வயல் சூழ்புனல் நீடூர்க்
கொல்லை வெள்ளெரு தேறல் வல்லானைக்

கூறிநாம் பணியாவிடலாமே. (3)
தோடு காதிடு தூநெறியானைத்
தோற்ற முந்துறப்பாய வன்றன்னைப்
பாடு மாமறை பாடவல்லானைப்
பைம்பொழிற்குயில் கூவிட மாடே
ஆடுமாமயில் அன்னமோடாட
அலைபுனற் கழனித்திரு நீடூர்
வேடனாய பிரானவன் றன்னை
விரும்பிநாம் பணியாவிடலாமே. (4)

குற்றம் ஒன்றடியார் இலர் ஆனற்
கூடுமாறதனைக் கொடுப்பானைக்
கற்ற கல்வியிலும் மினியானைக்
காணப்பேணு மவர்க்கெளியானை
முற்ற அஞ்சுந் துறந்திருப்பானை
மூவரின் முதலாயவன் றன்னைச்

சுற்று நீள்வயல் சூழ்திரு நீடூர்த்
தோன்றலைப் பணியாவிடலாமே. (5)

காடில் ஆடிய கண்ணுதலானைக்
காலனைக் கடிந்திட்ட பிரானைப்
பாடிஆடும்பரிசே புரிந்தானைப்
பற்றினோடு சுற்றம்மொழிப்பானைத்
தேடி மாலயன் காண்பரியானைச்
சித்தமுந்தெளிவார்க்கெளியானைக்
கோடி தேவர்கள் கும்பிடுநீடூர்க்
கூத்தனைப் பணியாவிடலாமே. (6)

விட்டிலங்கெரி யார்கையினானை
வீடிலாத வியன்புகழானைக்
கட்டு வாங்கந் தரித்தபிரானைக்
காதிலார் ககைக்குழையானை
விட்டிலங்கு புரிநூலுடையானை
வீந்தவர்தலை ஓடுகையானைக்
கட்டியின்கரும்போங்கிய நீடூர்க்
கண்டுநாம் பணியாவிடலாமே. (7)

மாயமாய மனங்கெடுப்பானை
மனத்துளே மதியாய் இருப்பானைக்
காய மாயமும் ஆக்குவிப்பானைக்
காற்றுமாய்க் கனலாய்க் கழிப்பானை
ஓயுமாறுரு நோய் புணர்ப்பானை
ஒல்லை வல்வினைகள் கெடுப்பானை
வேய்கொள் தோள்உமை பாகனை நீடூர்
வேந்தனைப் பணியா விடலாமே. (8)

கண்டமுங் கறுத்திட்ட பிரானைக்
காணப்பேணுமவர்க் கெளியானைத்
தொண்டரைப் பெரிதும் முகப்பானைத்
துன்பமுந்துறந்தின்பினியானைப்
பண்டை வல்வினைகள் கெடுப்பானைப்
பாகமாமதியானவன் றன்னைக்
கெண்டைவாளை கிளர்புனல் நீடூர்க்
கேண்மை யாற் பணியாவிடலாமே. (9)

அல்லல் உள்ளன தீர்த்திடுவானை
அடைந்தவர்க்கமுதாயிடுவானைக்
கொல்லை வல்லவரவம்மசைத்தானைக்
கோலமார் கரியின் உரியானை
நல்லவர்க்கணி ஆனவன்றன்னை
நானுங்காதல் செய்கின்றபிரானை
எல்லி மல்லிகையே கமழ் நீடூர்
ஏத்தி நாம் பணியாவிடலாமே. (10)

பேரோராயிரமும் முடையானைப்
பேசினார் பெரிதும்மினியானை
நீடூர் வார்சடை நின்மலன்றன்னை
நீடூர் நின்றுகந்திட்ட பிரானை
ஆரூரன்னடி காண்பதற் கன்பாய்
ஆதரித்தழைத்திட்ட இம்மாலை
பாருரும் பரவித்தொழவல்லார்
பத்தராய் முத்திதாம் பெறுவாரே. (11)

# திருநாவுக்கரசர் அருளிச்செய்த
## திருப்பதிகம்
### திருப்புன்கூரும்–திருநீடூரும்

---

பிறவாதே தோன்றிய பெம்மான் தன்னைப்
பேணாதார் அவர்தம்மைப் பேணாதானைத்
துறவாதே கட்டறுத்த சோதியானைத்
தூநெறிக்குந் தூநெறியாய் நின்றான்தன்னைத்
திறமாய எத்திசையுந்தானேயாகித்
*திருப்புன்கூர்* மேவிய சிவலோகனை
நிறமா மொளியானை *நீடூரானை*
நீதனேன் என்னேநான் நினையாவாறே. (1)

பின்றானும் முன்றானு மானான் தன்னைப்
பித்தர்க்குப் பித்தனாய் நின்றான்தன்னை
நன்றாங் கறிந்தவர்க்குத் தானேயாகி
நல்வினையுந் தீவினையுமானான் தன்னைச்
சென்றோங்கி விண்ணளவுந் தீயானானைத்
*திருப்புன்கூர்* மேவிய சிவலோகனை
நின்றாய *நீடூர்* நிலாவினானை
நீதானேன்என்னே நான் நினையாவாறே (2)

இல்லாளை எவ்விடத்தும் உள்ளான்தன்னை
இனிய நினையாதார்க் கின்னாதானை
வல்லானை வல்லடைந்தார்க்கருளும் வண்ணம்
மாட்டாதார்க் கெத்திறத்தும் மாட்டாதானைச்
செல்லாத செந்நெறிக்கே செல்விப்பானைத்
*திருப்புன்கூர்* மேவிய சிவலோகனை
நெல்லால்விளை கழனி *நீடூரானை*
நீதனேன் என்னேநான் நினையாவாறே. (3)

கலைஞானங் கல்லாமே கற்பித்தானைக்
கடுநரகஞ் சாராமே காப்பான்தன்னைப்
பலவாய வேடங்கள் தானேயாகிப்
பணிவார்கட் கங்கங்கே பற்றானானைச்
சிலையாற் புரமெரித்த தீயாடியைத்
**திருப்புன்கூர்** மேவிய சிவலோகனை
நிலையார் மணிமாட நீடூரானை
நீதனேன் என்னேநான் நினையாவாறே. (4)

நோக்காதே எவ்வளவும் நோக்கினானை
நுணுகாதே யாதொன்றும் நுணுகினானை
ஆக்காதே யாதொன்று மாக்கினானை
அணுகாதார் தம்மை அணுகாதானைத்
தேக்காதே தெண்கடல் நஞ்சுண்டான்தன்னைத்
**திருப்புன்கூர்** மேவிய சிவலோகனை
நீக்காத பேரொளிசேர் நீடூரானை
நீதனேன் என்னேநான் நினையாவாறே. (5)

பூணலாப் பூணானைப் பூசாச்சாந்த
முடையானை முடைநாறும் புன்கலத்தில்
ஊணலாவூணானை யொருவர் காணா
உத்தமனை ஒளிதிகழும் மேனியானைச்
சேணுலாஞ் செழும்பவளக் குன்றொப்பானைத்
**திருப்புன்கூர்** மேவிய சிவலோகனை
நீணுலா மலர்க்கழனி நீடூரானை
நீதனேன் என்னேநான் நினையாவாறே. (6)

உரையார் பொருளுக் குலப்பிலானை
யொழியாமே எவ்வுருவுமானான் தன்னைப்
புரையாய்க் கனமாயாழ்ந் தாழாதானைப்
புதியனவுமாய் மிகவும் பழையான்தன்னைத்

திரையார் புனல்சேர் மகுடத்தானைத்
திருப்புன்கூர் மேவிய சிவலோகனை
நிரையார் மணிமாட நீடூரானை
நீதனேன் என்னேநான் நினையாவாறே. (7)

உரரவத் தணையானுங் குளிர்தண் பொய்கை
மலரவனுங் கூடிச் சென்றறிய மாட்டார்
ஆரொருவரவர் தன்மை யறிவார் தேவர்
அறிவோமென் பார்க் கெல்லா மறிய லாகாச்
சீரரவக் கழலானை நிழலார் சோலைத்
திருப்புன்கூர் மேவிய சிவலோகனை
நீரரவத் தண்கழனி நீடூரானை
நீதனேன் என்னே நான் நினையா வாறே (8)

கையெலாம் நெய்பாயக் கழுத்தே கிட்டக்
கால்நிமிர்த்து நின்றுண்ணுங் கையர் சொன்ன
பொய்யெலாம் மெய்யென்று கருதிப் புக்குப்
புள்ளுவரால் அகப்படா துய்யப் போந்தேன்
செய்யெலாஞ் செழுங்கமலப் பழனவேலித்
திருப்புன்கூர் மேவிய சிவலோகனை
நெய்தல் வாய்ப் புனற்படப்பை நீடூரானை
நீதனேன் என்னே நான் நினையா வாறே (9)

இகழுமா றெங்ஙனே யேழை நெஞ்சே
மிகழாது பரந்தொன்றாய் நின்றான் தன்னை
கழுமால் வரைக் கீழிட்டரக்கர் கோனை
நலனழிந்து நன்கருளிச் செய்தான் தன்னைத்
திகழுமா மதகரியினுரி போர்த்தானைத்
திருப்புன்கூர் மேவிய சிவலோகனைத்
நிகழுமா வல்லானை நீடூரானை
நீதனேன் என்னேநான் நினையாவாறே (10)

திருச் ற்றம்பல

ஸ்ரீ ராகவன் பிரஸ்,
மாயூரம், 18—1—71.